# பத்திரிக்கை செய்தி

## விதவையின் மகள் திருமண திட்டத்தின் கீழ் உதவி வழங்க ரூ.4,000/- லஞ்சம் வாங்கிய சமூக நலத்துறை, விரிவாக்க அதிகாரி கைது

புகார்தாரர் திரு.மரியா சுபேதா ராமநாதபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது மகளின் திருமண உதவிக்காக அரசால் வழங்கப்படும் விதவையின் மகள் திருமண திட்டத்தின் கீழ் உதவி வழங்க சமூக நலத்துறை, மண்டபம் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திருமதி.பிரேமா, விரிவாக்க அதிகாரி, சமூக நலத்துறை, மண்டபம், ராமநாதபுரம் மாவட்டம் அவர்கள் புகார்தாரருக்கு விதவையின் மகள் திருமண திட்டத்தின் கீழ் உதவி வழங்க தனக்கு ரூ.4,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 20.03.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.பிரேமா, விரிவாக்க அதிகாரி, அவர்கள் லஞ்ச பணம் ரூ.4,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## SOCIAL WELAFRE DEPARTMENT, EXTENSION OFFICER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.4,000/-

The complainant Tr.Maria Subetha, is residing at Ramanathapuram District. The complainant had applied for releasing the benefit amount under widow's daughter marriage assistance scheme at office of the Social Welfare Department, Mandapam, Ramanathapuram District, for which Tmt. Prema, Extension officer, Social Welfare Department, Mandapam, Ramanathapuram District demanded Rs.4,000/- as bribe for processing her application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Ramanathapuram detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 20.03.2023, during the trap proceedings, Tmt. Prema, Extension officer reiterated her earlier demand and received the bribe amount from the complainant. The accused was arrested.